DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
SESSIONS COURT FOR EXCLUSIVE TRIAL OF BOMB BLAST CASES,
CHENNAI AT POONAMALLEE, CHENNAI – 56

| **Spl S.CNo.** | **17/2022 (CC No.3/2018)** | Deposition of | **PW. 73** (LW. 165) |
|---|---|---|---|
| Name | Tr. V.S.S. Anand Arockiyaraj | Father's Name | |
| Street | | Village | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act of X of 1873 on the 28.10.2025.

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.**

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 12.26 P.M**

நான் தற்போது திருச்சி போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 1.10.2016ந் தேதி கோயம்புத்துார் எஸ்ஐடி சிபிசிஐடியில் ஆய்வாளராக பணியில் இருந்த போது கோவை மாவட்ட சிபிசிஐடி குற்ற எண் 1/2016 சட்டப்பிரிவு 302 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையுடன் 1 முதல் 281 பக்கங்கள் கொண்ட ஆவணங்களை ஆய்வாளர் அண்ணாதுரையிடமிருந்து பெற்று வழக்கின் புலன் விசாரணையை ஏடிஜிபி அவர்களின் செயல் முறை ஆணையின் படி

மேற்கொண்டேன். அந்த ஆணை **அதசா ஆ 280** ( ஒரு தாள்) ஆகும். மேற்படி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த பின்பு 1.10.2016 அன்று 17.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான சுப்பரமணியன் பாளையம் சங்கர வினாயகர் கோயில் அருகில் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கு ஆஜரில் இருந்த சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அதசா ஆ281** (ஒரு தாள்). பார்வை மகசர் ஏற்கனவே அதசாஆ 179 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பார்வை மகசர் சாட்சிகளை தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் இவ்வழக்கின் புகார்தாரர் தனபால் (அசா 5) கோவிந்தராஜ் என்கிற முரளி, சுதாகர், இவ்வழக்கில் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கிய மருத்துவர் ஜெய்சிங் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 2.10.2016 அன்று சாட்சிகள் தனசேகர்,

யமுனா, சின்னசாமி, ராதா, சுகுணா, மற்றும் மூன்று பாதுகாக்கப்பட்ட சாட்சிகள் ஆகியோரை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 3.10.2016 அன்று சாட்சிகள் அசோக்குமார், ராஜன், நடராஜ், பிச்சைமுத்து, தசரதன், பார்த்தீபன், கௌதம் ஆகியோர்களை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினம் நடராஜன் என்கிற குமார் என்கிற பொட்டு குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையின் போது சம்பவ இடத்தில் இவ்வழக்கில் இறந்த நபர் ரத்தக்கறையுடன் கிடப்பதையும் அவர் பயன்படுத்திய ஹோண்டா ஆக்டிவா சம்பவ இடத்தில் இருந்ததையும் தன்னுடைய கைபேசியில் புகைப்படம் எடுத்ததை எங்களிடம் காண்பித்தார். அந்த புகைப்படத்தை கணிணியில் பதிவிறக்கம் செய்து 65 பி சான்றிதழ் பெற்றேன். அந்த புகைப்படங்கள் மற்றும் 65 பி சான்றிதழ் **அதசா ஆ 282** ( 2

தாள்கள்) (எதிரி தரப்பு வழக்குரைஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). அன்றைய தினம் பொட்டு குமாரின் ஓட்டுநர் சதீஷ்குமாரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 4.10.2016 அன்று சாட்சிகள் பாலன் என்கிற பாலகிருஷ்ணண் என்கிற உருமாண்டம்பாளையம் பாலு மற்றும் கே ஜி மருத்துவமனை மருத்துவர் டாக்டர் பானு சந்திர பாண்டியன் ஆகியோரை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சி 1 காட்டூர் காவல் ஆய்வாளர் சரவணண், துடியலூர் காவல் ஆய்வாளர் வெற்றிவேந்தன், துடியலூர் சார்பு ஆய்வாளர் மியான்டிட் மனோ, சி 2 பந்தைய சாலை சார்பு ஆய்வாளர் அமுதா ஆகியோரை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 5.10.2016 அன்று சாட்சிகள் தீனதயாளன், தினேஷ் என்கிற தினேஷ்குமார், மணிகண்டன், கண்ணண் ஆகியோரை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 6.10.2016 அன்று

இவ்வழக்கின் சம்பவ இடத்தை இவ்வழக்கின் முதல் விசாரணை அதிகாரியான துடியலூர் பொறுப்பு ஆய்வாளர் செல்வராஜ் பார்வையிட்ட போது எடுக்கப்பட்ட எட்டு புகைப்படங்களை புகைப்பட கலைஞர் சாட்சி சரவணகுமார் அவரிடமிருந்து பெற்று அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 7.10.2016 அன்று சாட்சிகள் கதிர்வேல், கிருஷ்ணகுமார் மற்றும் ஒரு பாதுகாக்கப்பட்ட சாட்சி ஆகியோரை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 8.10.2016 அன்று சாட்சிகள் கிருஷ்ணபிரசாத், டாக்டர் ஜி கே எஸ் செல்வகுமார் மற்றும் ஒரு பாதுகாக்கப்பட்ட சாட்சி ஆகியோரை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 9.10.2016 அன்று 3 பாதுகாக்கப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மூவரில் ஒரு பாதுகாக்கப்பட்ட சாட்சி எதிரியின் முகம் தனக்கு தெரியும் என்று கூறியதை அடுத்து ஒய்வு பெற்ற

காவல் ஆய்வாளர் திருமதி விஜயலெஷ்மி அவர்களை அலுவலகம் வரவழைத்து மேற்படி சாட்சி கூறியபடி எதிரியின் மாதிரி முகம் வரையப்பட்டது. (அதசா ஆ 253). காவல் ஆய்வாளர் திருமதி விஜயலெஷ்மி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.10.2016 அன்று திருமதி உமா, உதவி இயக்குநர், தடய அறிவியல் துறை, மொபைல் லேபரட்டரி, கோவை அவர்கள் ஆஜர் செய்த இரத்த மாதிரிகள் சேகரித்ததை அறிக்கையாக பெற்றுக் கொண்டேன். அன்றைய தினம் சாட்சி நடராஜன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.10.2016 அன்று சாட்சிகள் கந்தசாமி மற்றும் காளிராஜ் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் விரல்ரேகை பதிவு நிபுணர் திரு பாலகுருசாமி, இவ்வழக்கில் இறந்த சசிகுமாருக்கு சொந்தமான ஹோண்டா ஆக்டிவா வாகனத்தின் விரல் ரேகை பதிவுகள் உள்ளதா

என்பதை ஆய்வு செய்ததன் அறிக்கையை நான் பெற்றேன். 14.10.2016 அன்று சாட்சி மதன் என்கிற மதனமோகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே எதிரியின் உத்தேச புகைப்படமான அதசா ஆ 253 பத்திரிக்கை செய்தி தயார் செய்து பத்திரிக்கையாளருக்கு கொடுத்தேன். பத்திரிக்கையில் வெளியான எதிரியின் உத்ததேச புகைப்படத்தை நான் சேகரித்து வைத்துள்ளேன். அந்த பத்திரிக்கை செய்தி **அதசா ஆ 283.** (எதிரி தரப்பு வழக்குரைஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 15.10.2016 அன்று சாட்சிகள் சுரேஷ்குமார், சுனில் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.10.2016 அன்று ஒரு பாதுகாக்கப்பட்ட சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையின் போது அவர் தன் செல்போனிலிருந்து காட்டிய முகநூல் பதிவின் ஸ்கீரின் ஷாட்(screen

shot) பதிவிறக்கம் செய்து 65 பி சான்றிதழுடன் இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்தேன். அந்த ஆவணம் **அதசா ஆ 284** (2 தாள்கள் பாதுகாக்கப்பட்ட ஆவணம்) ஆகும். 17.10.2016 அன்று சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் வேலுசாமி ஆகியோரை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.10.2016 அன்று சாட்சி வினோத் என்கிற வினோத்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.10.2016 அன்று ஒரு பாதுகாக்கப்பட்ட சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 26.10.2016 அன்று ஒரு பாதுகாக்கப்பட்ட சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.11.2016 அன்று ஒரு பாதுகாக்கப்பட்ட சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.11.2016 அன்று சாட்சி முகமது அலி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.11.2016 அன்று ஒரு

பாதுகாக்கப்பட்ட சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 19.11.2016 அன்று சாட்சி ஜெகதீசன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் மேற்படி சாட்சி ஜெகதீசன் விசாரணையின் போது தன்னிடம் வேலை செய்த இவ்வழக்கின் எதிரி சதாம் உசேன் சம்பந்தப்பட்ட வருகை சான்றிதழை ஆஜர் செய்தார். 8.12.2016 அன்று சாட்சி திருப்பதி ராமசாமி என்கிற ராஜா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சி துவங்கிய நேரம் 2.54 pm**

10.12.2016 அன்று தலைமை காவலர் 1542 பழனிசாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணை முடிவில் அவர் தனி பிரிவு அலுவலகத்திற்கு 26.9.2015 அன்று அவர் துடியலூர் காவல் நிலையத்தில் தனி பிரிவு காவலராக இருந்த போது எஸ்டிபிஐ கட்சி கொடிகம்பம் அகற்றியது சம்பந்தமாக

கொடுத்த அறிக்கையின் நகலை என்னிடம் சமர்ப்பித்தார். 13.12.2016 அன்று வருவாய் ஆய்வாளர் சரவணண் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் திரு பாண்டி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.12.2016 அன்று சாட்சி ரமேஷ்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் எதிரிகள் சதாம் உசேன் மற்றும் முபாரக் ஆகியோருக்கு 41 ஏ அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. எதிரி சதாம் உசேனுக்காக அவருடைய தாயாரும் முபாரக் சார்பாக அவரது மனைவியும் பெற்றுக்கொண்டார்கள். சதாம் உசேனுக்கு அனுப்பபட்ட அழைப்பாணை **அதசா ஆ 285** ஆகும். முபாரக்கு அனுப்பபட்ட அழைப்பாணை **அதசா ஆ 286** ஆகும். மேற்படி இருவரும் தொடர்ந்து ஆஜராகததால் 19.12.2016 அன்று மேற்படி இருவருக்கும் 41 ஏ அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. எதிரி சதாம் உசேனுக்காக அவருடைய தாயாரும் முபாரக் சார்பாக அவரது

மனைவியும் பெற்றுக்கொண்டார்கள். சதாம் உசேனுக்கு அனுப்பபட்ட அழைப்பாணை **அதசாஆ.287** ஆகும். முபாரக்கு அனுப்பபட்ட அழைப்பாணை **அதசாஆ 288** ஆகும். 20.12.2016 அன்று சதாம் உசேனை காணவில்லை என்றும் அவருடைய தந்தை பர்கத்துல்லா கோவை மாநகர காவல் ஆணையரிடம் ஒரு புகார் மனு அளித்துள்ளார். அந்த புகார் **அதசா ஆ 289** ஆகும். அன்றைய தினமே முபாரக் அலியினை காணவில்லை என்று அவரது மனைவி ஆயிஷா கோவை மாநகர காவல் ஆணையரிடம் ஒரு புகார் மனுவினை கொடுத்துள்ளார். அந்த புகார் **அதசா ஆ 290** ஆகும். மேற்படி நகல்களை நான் பெற்று ஆய்வு செய்தேன். 23.12.2016 அன்று சாட்சிகள் சித்திக் (அசா 67) மற்றும் சரஸ்வதி ஆகியோரை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி சித்திக் குவிமுச பிரிவு 161 வாக்குமூலத்தில் சொன்னதை தான் என் விசாரணையிலும் சொல்லியுள்ளார். 28.12.2016 அன்று

முபாரக்கின் மனைவி ஆயிஷா காவல் ஆணையரிடம் கொடுத்த புகார் மனு சம்பந்தமாக கோவை மாநகர் சாய்பாபா காலனி காவல் நிலையத்தில் குற்ற எண் 801/2016 சட்டப்பிரிவு man missing என்றும் அன்றைய தினமே சதாம் உசேனை காணவில்லை என்று அவர் தந்தை பர்கத்துலா கொடுத்த புகாரின் பேரில் கோவை மாநகர ரத்தினபுரி காவல் நிலையத்தில் குற்ற எண் 1150/2016 சட்டப் பிரிவு man missing என்றும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று விசாரணையில் தெரிந்து கொண்டேன். 30.12.2016 அன்று இவ்வழக்கில் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்த சதாம் உசேன் மற்றும் முபாரக் ஆகியோரின் புகைப்படங்களை பத்திரிக்கையில் வெளியிட பத்திரிக்கை செய்தி தயாரித்தேன். இது சம்பந்தமாக தகவல் கிடைத்தால் தகவல் தெரிவிப்பதற்காக என்னுடைய தொலைபேசி எண்ணில் தெரிவிக்கும்படி கூறினேன். அந்த பத்திரிக்கை செய்தி குறிப்பு **அதசா ஆ 291** (2 தாள்கள் ஆகும்). அதன்படி 31.12.2016

அன்று பெறப்பட்ட தின பத்திரிக்கைகளான தினகரன், தினதந்தி மற்றும் தினமலர் பத்திரிக்கையில் செய்திகள் வெளியாகின. அதன் நகல்கள் எதசா ஆ 14 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 21.1.2017 அன்று இவ்வழக்கின் தலைமறைவாக இருந்து வந்த சதாம் உசேன் மற்றும் முபாரக் வெளிநாட்டுக்கு தப்பி சென்று விடக்கூடாது என்பதற்காக look out circular வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது சம்பந்தமாக 21.1.2017 தேதியிட்ட கடிதம் **அதசா ஆ 292** ஆகும். அதன்படி 3.2.2017 தேதி அன்று வெளியிடப்பட்ட look out circular **Ex.P.293** (two pages) 15.2.2017 அன்று மேற்படி தலைமறைவு எதிரிகளை பற்றி தகவல் பெற மேற்படி எதிரிகளின் புகைபடத்துடன் கூடிய wanted notice தமிழ் மற்றும் ஆங்கிலம் அச்சிடப்பட்டு பொது மக்களிடம் விநியோகிக்கப்பட்டது. அந்த பிரசுரங்கள் **அசாஆ 294** (2 தாள்கள் ஆகும்). 22.3.2017 அன்று காலை 7.15 மணிக்கு

சரவணப்பட்டியிலிருந்து துடியலூர் செல்லும் சாலையில் எஸ்என்எஸ் கல்லூரி அருகே எதிரி அபு என்கிற சையத் அபுதாகிர் என்பவரை கைது செய்து அன்று காலை 8.30 மணிக்கு எங்கள் அலுவலகத்திற்கு வந்து விசாரணை செய்து அன்றைய தினமே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எதிரி அபு என்கிற சையத் அபுதாகிரை போலிஸ் காவலில் எடுத்து விசாரணை செய்தோம். 31.3.2017 அன்று சாட்சிகள் வருவாய் ஆய்வாளர் கவிதா மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பழனிசாமி முன்னிலையில் எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். போலிஸ் காவல் முடிந்து எதிரியை மீண்டும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 4.4.2017 அன்று தலைமறைவாக உள்ள எதிரிகள் சதாம் உசேன் மற்றும் முபாரக் ஆகியோர் பற்றி தகவல் தெரிவித்தால் ரூ 2 லட்சம் சன்மானம் வழங்கப்படும் என்று காவல் துறை தலைமை இயக்குநர் கொடுத்த உத்தரவின் பேரில் மேற்படி தகவல் எதிரிகள் புகைப்படத்துடன்

பொதுமக்களிடம் விநியோகிக்கப்பட்டது. 4.4.2017 தேதியிட்ட காவல் துறை இயக்குநர் அளித்த உத்தரவு **அதசா ஆ 295** ஆகும். அந்த உத்தரவின் படி 11.4.2017 அன்று வழங்கப்பட்ட பத்திரிக்கை குறிப்பு **அதசா ஆ 296** ஆகும். மேற்படி உத்தரவின்படி பிரசுரிக்கப்பட்ட துண்டு பிரசுரங்கள் **அதசா ஆ 297** ( 3 தாள்கள்) ஆகும். 18.4.2017 அன்று இவ்வழக்கின் சம்பவ இடத்தின் புல எண் மற்றும் எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்று கேட்டு துடியலூர் வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டது. அந்த கடிதம் **அதசா ஆ 298** ஆகும். 19.4.2017 அன்று வருவாய் ஆய்வாளர், துடியலூர் அவர்கள் பதில் அளித்துள்ளார். அந்த பதில் **அதசா ஆ 299** ( 2 தாள்கள்) ஆகும். 23.5.2017 அன்று இளநிலை பொறியாளர் வார்ட் எண் 3, கோவை வடக்கு கோவை மாநகராட்சி அவர்களுக்கு இவ்வழக்கு சம்பவம் நடந்த 22.09.2016 அன்று இரவு 23.15 மணியளவில் அந்த பகுதியில் உள்ள மின் விளக்குகள்

எரிந்ததா என்று விளக்கம் கேட்டு கடிதம் அளித்தேன். அந்த கடிதம் **அதசா ஆ 300** ( 1 தாள்) ஆகும். 25.5.2017 அன்று அவர் அளித்த பதில் **அதசா ஆ 301** ஆகும். 26.5.2017 அன்று இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ரோஷன் மற்றும் எதிரி ரபிக்குல் அசன் ஆகியோர் வெளிநாடு தப்பி செல்லாமல் இருப்பதற்காக look out circular எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 31.5.2017 அன்று இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது. அன்றைய தினமே மேற்படி சொத்துக்களில் பகுப்பாய்வு செய்வதற்கான சொத்துக்களை மட்டும் நீதிமன்றத்தின் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 31.5.2017 அன்று ரோஷன் மற்றும் வழக்கின் எதிரி ரபிக்குல்அசன் ஆகியோர் மீது look out circular initiate செய்யப்பட்டது. 1.6.2017 அன்று தடய அறிவியில் ஆய்வகத்தில் சொத்துக்கள்

ஒப்படைப்பு செய்வதற்காக பெறப்பட்ட ஒப்புகை **அதசா ஆ 302** ( 1 தாள்) ஆகும். 1.8.2017 அன்று இவ்வழக்கில் தேடப்பட்டு வந்த எதிரி சதாம் உசேனை தகவலாளி அடையாளம் காட்ட அன்று மாலை16 . 00மணிக்கு கோயம்புத்துார் அவினாசி பிரதான சாலையில் கருமத்தம்பட்டியில் தனலட்சுமி ஸ்பின்டெக்ஸ் மில்ஸ் அருகே அன்று ஆஜரில் இருந்த குபேந்திரன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிந்திரநாத் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து 19.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 4.8.2017 அன்று எதிரியை போலிஸ் காவலில் எடுத்து விசாரணை செய்து 8.8.2017 அன்று 17.00 மணிக்கு சாட்சிகள் உமாபாரதி மற்றும் வேணுகோபால் ஆகியோர் முன்னிலையில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்கமூலத்தின் அடிப்படையில் அதே சாட்சிகளின் முன்னிலையில்

எதிரி தன்னுடைய வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த எஸ்டிபிஐ உறுப்பினர் அட்டைகளை மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த மகசர் ஏற்கனவே அதசா ஆ 34 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 31.8.2017 அன்று தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. அந்த 20.6.2017 தேதியிட்ட பகுப்பாய்வு அறிக்கை **அதசா ஆ 303** (1 தாள்) ஆகும். 11.10.2017 அன்று 16.30 மணிக்கு கோவை பொள்ளாச்சி பிரதான சாலையில் உள்ள முள்ளுபாடி ரயில்வே கேட் அருகே சூலக்கல் பிரிவில் வைத்து ஆஜர் சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் முரளி மற்றும் முதல் நிலை காவலர் முபாரக் அலி ஆகியோர் முன்னிலையில் தலைமறைவு எதிரி சுபேர் என்பவரை கைது செய்து எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை அழைத்துச் சென்றால் சம்பவத்தில்

தான் பயன்படுத்திய அரிவாளை எறிந்த இடத்தை அடையாளம் காட்டுவதாக கூறினார். அன்றே எதிரி கூட்டி சென்று காட்டிய இடம் ஒரு பெரிய கழிவு நீர் தொட்டியாகும். அதனால் அன்றைய தினமே அரிவாளை எங்களால் கைப்பற்ற இயலவில்லை. தொடர்ந்து எதிரி தன்னை கூட்டி சென்றால் சம்பவம் எப்படி நிகழந்தது என்று செய்து காட்டுவதாக கூறினார். அதை தொடர்ந்து எதிரியினை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 13.10.2017 முதல் 20.10.2017 வரை எதிரி சுபேரினை போலிஸ் காவலில் எடுத்து விசாரணை செய்ததில் 14.10.2017 அன்று எதிரி சுபேரின் உறவினரான சாட்சி முகமது இஸ்மாயில் (அதசா 19) ஆஜர் செய்த T N 38 AF 0994 இரு சக்கர வாகனம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை மகசர் மூலம் கைப்பற்றினேன். 19.10.2017 அன்று காலை 10.30 மணிக்கு போலிஸ் காவலில் இருந்த எதிரி சுபேர் சாட்சிகள் உமா பாரதி, பிரபு ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை

பதிவு செய்தேன். விசாரணை முடித்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு ஒப்புவித்தேன். 20.10.2017 அன்று மேற்படி எதிரி சுபேரை அடையாளம் காட்ட மனு செய்து 27.10.2017 அன்று அடையாள அணி வகுப்பு நடவடிக்கை நீதித்துறை நடுவர் முன்பு மேற்கொள்ளப்பட்டது. 28.10.2017 அன்று இவ்வழக்கின் எதிரி சுபேர் அடையாளம் காட்டிய இடத்தில் அவர் பயன்படுத்திய அரிவாளை சாட்சிகள் வருவாய் ஆய்வாளர் உமா பாரதி மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பிரபு ஆகியோர் முன்னிலையில் துப்புரவு பணியாளர் முத்துசாமி எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் கைப்பற்றினேன். அதை தொடர்ந்து மேற்படி கைப்பற்றப்பட்ட அரிவாளை இவ்வழக்கில் இறந்த சசிகுமாரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஜெய்சிங் அவரிடம் காட்டி கேள்விகள் கேட்டு பதில்களை பதிவு செய்துள்ளேன். அந்த 31.10.2017 தேதியிட்ட மருத்துவர் ஜெய்சிங் அவர்களின் பதில் **அதசா ஆ 304** (1 தாள்)

ஆகும். அன்றைய தினமே கைப்பற்றப்பட்ட அரிவாள் மகசர் தயார் செய்யப்பட்டு படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. 19.11.2017 அன்று துடியலூர் உதவி ஆய்வாளர் மியான்டிட் மனோவினை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.11.2017 அன்று இவ்வழக்கின் விசாரணையின் தன்மையை கருதியும் இவ்வழக்கின் சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் இவ்வழககின் சட்டப்பிரிவினை 16 and 18 of UA(P) Act ஆக மாற்றி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த அறிக்கை **அதசா ஆ 305** ( 4 தாள்கள்) ஆகும். அன்றைய தினம் சசிகுமார் கொலை செய்யப்பட்ட அன்றும் அதற்கு மறுநாளும் இந்த கொலை தொடர்பாக நடந்த சம்பவங்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு விவரங்களை கேட்டு கோவை மாநகர காவல் ஆணையருக்கும் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் வேண்டுகோள் கடிதம் வைத்து விவரங்கள் பெற்றேன். நான் பெற்ற விவரங்கள் அதசா ஆ 306.

( எதிரி தரப்பின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

இந்த வழக்கின் சட்டப்பிரிவுகள் மாற்றம் செய்யப்பட்டதால் வழக்கின் விசாரணை அதிகாரியாக காவல் துறை கண்காணிப்பாளர் ஆனந்த் குமார் அவர்கள் ஏடிஜிபி சிபிசிஐடி 24.11.2017ந் தேதியிட்ட கடிதம் மூலம் நியமிக்கப்பட்டார். அது அதசா ஆ 307 ஆகும். இவ்வழக்கின் கோப்புகளை காவல் துணை கண்காணிப்பாளர் ஆனந்த் குமார் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**முதல் விசாரணை முடிவடைந்த நேரம் 4.45 P.M**

**1 முதல் 5 எதிரிகளுக்கான பொதுவான குறுக்கு விசாரணை இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2025.10.29 16:55:56 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.